# 8

Register No. ______

## முழு ஆண்டுத் தேர்வு – 2024

## தமிழ்

கால அளவு : 2.30 மணி நேரம் | மதிப்பெண்கள் : 100

### பகுதி – 1

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.** **10 x 1 = 10**

1. செவ்விந்தியர்கள் நிலத்தைத்..............மதிக்கின்றனர்.
   அ) தாயாக ஆ) தந்தையாக இ) தெய்வமாக ஈ) தூய்மையாக
2. முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல்............எனப்படும்.
   அ) முற்று ஆ) எச்சம் இ) முற்றெச்சம் ஈ) வினையெச்சம்
3. கல்விப் பயிற்சிக்குரிய பருவம்.........
   அ) இளமை ஆ) முதுமை இ) நேர்மை ஈ) வாய்மை
4. சேரர்களின் தலைநகரம்............
   அ) காஞ்சி ஆ) வஞ்சி இ) தொண்டி ஈ) முசிறி
5. விகாரப் புணர்ச்சி............வகைப்படும்.
   அ) ஐந்து ஆ) நான்கு இ) மூன்று ஈ) இரண்டு
6. இந்திய அரசு சிறந்த நடிகருக்கான............எனும் பட்டத்தை எம்.ஜி.ஆருக்கு வழங்கியது.
   அ) புரட்சித் தலைவர் ஆ) பாரத் இ) பாரதமாமணி ஈ) புரட்சி நடிகர்
7. முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது................
   அ) எதுகை ஆ) இயைபு இ) அந்தாதி ஈ) மோனை
8. 'இன்பதுன்பம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.............
   அ) இன்ப + துன்பு ஆ) இன்ப + அன்பம் இ ) இன்பம் + துன்பம் ஈ) இன்ப + அன்பு
9. இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர்.............
   அ) இராதாகிருஷ்ணன் ஆ) அம்பேத்கர் இ) நேதாஜி ஈ) நேரு
10. வறுமை வந்த காலத்தில்............குறையாமல் வாழ வேண்டும்.
    அ) இன்பம் ஆ) தூக்கம் இ) ஊக்கம் ஈ) ஏக்கம்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** **5 x 1 = 5**

11. எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர்...............
12. புறஉலக ஆராய்ச்சிக்கு.................கொழுகொம்பு போன்றது.
13. பின்னலாடை நகரமாக...........விளங்குகிறது.
14. பொருளாதாரப் படிப்பிற்காக அம்பேத்கர்..............சென்றார்.
15. 'கண்ணா வா' – என்பது..............தொடர்.

**III. பொருத்துக.** **5 x 1 = 5**

16. வினைமுற்றுத்தொடர் – தோன்றல் விகாரம்
17. கடைத்தெரு – வினையெச்சம்
18. ஆறாம் வேற்றுமை – அகவலோசை
19. நடந்து – வென்றான் சோழன்
20. ஆசிரியப்பா – பாரியினது தேர்

### பகுதி – 2

**IV. எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** **6 x 2 = 12**

21. ஒலிய எழுத்து என்றால் என்ன?
22. புயல்காற்றினால் தொண்டைமான் நாட்டில் ஏற்பட்ட அழிவு யாது?
23. நல்வாழ்விற்கு நாம் நாள்தோறும் செய்யவேண்டியவை யாவை?
24. பகைவர்களிடம் நாம் நடந்து கொள்ள வேண்டிய முறை யாது?
25. கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் யாவை?
26. இருண்ட ஆட்சி என எதனை மீரா குறிப்பிடுகிறார்?
27. யாருக்கு எமனைப் பற்றிய அச்சம் இல்லை?
28. இவ்வுலகம் யாரால் இயங்குவதாகத் திருக்குறள் கூறுகிறது?
29. அம்பேத்கர் தன் பெயரை ஏன் மாற்றிக் கொண்டார்?

## பகுதி – 3

**V. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்க.** 4 x 4 = 16

30. இந்திய அரசியல் அமைப்புச்சட்டம் உருவாக அம்பேத்கர் ஆற்றிய பணிகள் யாவை?
31. மழைச்சோறு எடுத்தபின் எவ்வாறு மழை பெய்தது?
32. மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் குறித்து எழுதுக.
33. உடல்நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
34. நீர்நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறுவன யாவை?
35. எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.

**VI. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க.** 5 x 2 = 10

36. மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?
37. வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?
38. 'அழகிய மரம்' – எச்ச வகையை விளக்குக.
39. உடனிகழ்ச்சிப் பொருள் என்றால் என்ன?
40. தொகைநிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
41. இயல்புப் புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
42. சந்திப்பிழை என்றால் என்ன?
43. வேற்றுமை அணி என்றால் என்ன?

## பகுதி – 4

**VII. அடிபிறழாமல் எழுதுக.** 4 + 2 = 6

44. 'ஒன்றே குலமும்' முதல் 'உய்ம்மினே' முடிய உள்ள 'ஒன்றேகுலம்' மனப்பாடப் பாடலை எழுதுக. **(அல்லது)**
 'வாழ்க நிரந்தரம்' என்னும் தமிழ்மொழி வாழ்த்துப் பாடலை எழுதுக.
45. 'பண்புடையார்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

## பகுதி – 5

**VIII. மொழிப்பயிற்சி (எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும்)** 6 x 2 = 12

46. அ) இவை............(தான்/தாம்) எனக்குப் பிடித்த நூல்கள்.
 ஆ) சிறுமி ............(தனது/தமது) கையில் மலர்களை வைத்திருந்தாள்.
47. இரண்டு தொடர்களை ஒரே தொடராக்குக:
 அ) மழை நன்கு பெய்தது. எங்களால் விளையாட முடியவில்லை.
 ஆ) எனக்குப் பால் வேண்டும். எனக்குப் பழம் வேண்டும்.
48. மரபுத் தொடர்களைத் தொடரில் அமைக்க.
 அ) முதலைக் கண்ணீர் ஆ) வாழையடி வாழையாக
49. கலைச் சொற்களை எழுதுக. அ) Flute ஆ) Awareness
50. **பொருத்தமான இடங்களில் நிறுத்தற்குறிகளை இடுக.**
 அ) பூக்கள் நிறைந்த இடம் சோலை ஆகும்.
 ஆ) திருக்குறள் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால் பகுப்புக் கொண்டது.
51. **உவமைத் தொடர்களை தொடரில் அமைக்க.**
 அ) உடலும் உயிரும் போல ஆ) கிணற்றுத் தவளை போல
52. **சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.**
 அ) பூ................(கொய் / பறி) ஆ) சோறு............(தின் / உண்)

## பகுதி – 6

**IX. விரிவான விடையளி.** 3 x 8 = 24

53. அ) எம்.ஜி.ஆரின் பண்புநலன்களை விளக்கி எழுதுக. **(அல்லது)**
 ஆ) தமிழர் மருத்துவத்தின் சிறப்புளாக மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?
54. அ) குழந்தை கிருஷ்ணாவின் பண்புநலன்களைப் பற்றித் தொகுத்து எழுதுக. **(அல்லது)**
 ஆ) 'வெட்டுக்கிளியும் சருகுமானும்' கதையைச் சுருக்கி எழுதுக.
55. அ) புத்தகம் வாங்கி அனுப்புமாறு உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக. **(அல்லது)**
 ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.
 முன்னுரை – நோய் வரக் காரணங்கள் – நோய் தீர்க்கும் வழிமுறைகள் – வருமுன் காத்தல் – உணவும் மருந்தும் – உடற்பயிற்சியின் தேவை – முடிவுரை.